அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.08/2001

எனது இல. 11/575/தா/61
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு,07
2001 ஏப்ரல் மாதம் 27 ஆந் திகதி

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## சாரதியாளர் சீருடை

தாபன விதிக்கோவையின் XXI ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவின் மூலம் மோட்டார் வாகன/ஜீப்/சாரதியாளர்களுக்கு விதித்துரைத்துள்ள சீருடை பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

02- இடது பக்கத்தில் ஒரு பொக்கெற்றும், வெள்ளை நிற பொத்தான்களுடனான, மூடிய கொளருடைய வெள்ளை நிற கட்டைக் கை சேட்டும், கறுப்பு நிற நீண்ட காற்சட்டையுமாக வருடத்திற்கு இரண்டு சோடி சீருடைகள் வழங்கப்பட வேண்டும். கறுப்பு நிற நீண்ட காற்சட்டைக்கு மாற்றுடையாக வெள்ளை நிற சாரம் ஒன்றை வழங்கலாம்.

03. பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது,

ஒப்பம்: எம்.என்.ஜுனைட்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு